பேச்சு - வகுப்பு - 7 / 8

# தரணி எங்கும் தமிழ் வளர்ப்போம்

**தமிழ் என்றோர் இனம் உண்டு**

**தனியே அவர்க்கொரு குணம் உண்டு**

**அமிழ்தம் அவனது மொழியாகும்**

**அன்பே அவனது வழியாகும்**

என்ற நாமக்கல் கவிஞனின் பாடலிற்கிணங்க முத்தான முதல் தமிழ் அன்றே தமிழன் அகவாழ்விலும் புறவாழ்விலும் வேரூன்றி நிற்கின்றது. முத்தமிழ், அருந்தமிழ், இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ், எனவெல்லாம் புகழ்பெற்ற தாய் மொழியான தமிழ்மொழி தரணியெங்கும் வாழ வழி அமைப்பது புலம்பெயர்ந்த தமிழர்களின் கடமையாகும்.

'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன் தோன்றிய தமிழ் மொழி' நம் அடுத்த தலைமுறைக்கும் நிலைக்க வேண்டும். தமிழ்ச் சமுத்திரத்தில் கொட்டிக் கிடக்கும் முத்துக்களைச் சொல்லவா வேண்டும்? முல்லைக்குத் தேர் கொடுத்து, கல்லிலும் முள்ளிலும் நடந்தார் பாரிவள்ளல். நீண்ட ஆயுள் தரும் என அறிந்தும் நெல்லிக்கனியை ஔவைக்கு கொடுத்த அதியமான். போர்க்களத்தில் புறமுதுகு காட்டி ஓடிய மகனைத் தன் சேய் எனக் கூற அவமானப்பட்ட வீர தமிழ்த்தாய். இறக்கும் போது தானம் கேட்டு வந்தவருக்கு தன் உயிரையே தானம் செய்து கொடுத்தார் கொடைவள்ளல் கர்ணன். இவ்வாறான இதிகாசங்கள் நம் அடுத்த சந்ததியினருக்கு போய்ச் சேரவேண்டும்.

தமிழன் எங்கு எப்போது வாழ்ந்தாலும் தமிழனாக வாழ வேண்டும். அவன் வாழ்க்கைச் சோலையில் தமிழ் மணம் கமழ வேண்டும். தமிழன் தமிழனாக வாழ முதலில் மொழி பேச எழுதக் கற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் மொழி கற்பதன் மூலம் தமிழ்ப் பண்பாட்டை நுகர முடியும். தமிழ்ப் பண்பாட்டைக்

காவித்திரியும் வாகனம் தமிழ் மொழி. எமது மொழியை நாம் கற்பதன் மூலம் தமிழ்ப் பண்பாட்டை முழுமையாக நுகர முடியும்.

தமிழன் என்று சொல்லி தலை நிமிர்ந்து வாழ முதலில் நாம் தமிழன் என்பதில் பெருமைப் பட வேண்டும். தமிழ் உலகின் மூத்த மொழிகளில் முன் நிற்கிறது, தொன்மையான மொழி, செழுமையான மொழி, வளம் மிக்க மொழி, தித்திக்கும் தீந்தமிழ், இனிய மொழி, பக்தி பரவசம் மிக்க மொழி, யாம் அறிந்த மொழிகளில் தமிழுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு என வீரமாமுனிவர் கூறியுள்ளார். உலக மாமறையாம் திருக்குறள் இன, மத மொழி பாகுபாடின்றி மனித குலத்திற்கு அறிவொளி கொடுக்கிறது. தமிழ்மொழியைப் பரப்ப புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு பல வாய்ப்புகள் உண்டு. மேற்கே வளரும் புத்தம்புது கலைகளை தமிழில் படைப்போம். இத்தனைக்கும் மேலாக எம் சிறார்க்கும் தமிழ் அறிவைப் புகட்டுவோம். தமிழ் தெரியாத தமிழினம் ஒன்று உருவாகாமல் பார்த்துக் கொள்வோம்.

தரணி ஆண்ட தமிழன் மீண்டும் உலகை ஆள வேண்டும். அது அதிகாரத்தால் அல்ல, அறிவியல் சக்தியால், மூளை பலத்தால் தரமான தமிழ் சமுதாயம் ஒன்றை அமைத்து தரணியெங்கும் தமிழன் என்று சொல்லி தலை நிமிர்ந்து நின்றிடுவோம்.

உறவுக்குத தமிழினம், உரிமைக்கு நம் நாடு
உயிருக்கு தமிழன்னை உணர்வுடன் நம் உள்ளம்”

நன்றி வணக்கம்.